தமிழ் நாடு பேரிடர்
அபாயக் குறைப்பு முகமை,
26 APR 2022
சென்னை-5.

<u>சுருக்கம்</u>

பேரிடர் மேலாண்மை – நீலகிரி மாவட்டம் –19.07.2021 முதல் 25.07.2021 வரையிலான காலகட்டத்தில் வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ.14,42,205/–ஐ நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பேரிடர் மேலாண்மை அலகு,</u>
<u>பே.மே.2 பிரிவு</u>

அரசாணை (நிலை) எண். 162

நாள் : 18.04.2022
சுபகிருது வருடம், சித்திரை 05
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் [பே.மே III (2)] துறை, நாள். 03.08.2017.
2. மாவட்ட ஆட்சியர், நீலகிரி கடித எண். D6 / 6584 / 2021, நாள். 10.08.2021.
3. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநரின் கடித எண்.பயிற்சி/6678/2021, நாள் 25.08.2021.
4. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண்.இ.பே.1/3671//2021, நாள்.11.01.2022.

*******

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் தனதறிக்கையில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், நீலகிரி மாவட்டத்தில் 19.07.2021 முதல் 25.07.2021 வரையிலான காலகட்டத்தில், வீசிய காற்று மற்றும் மழையினால் தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததாகவும், நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநருடன் கூட்டு புலத் தணிக்கை செய்ததில், 33 விழுக்காடுக்கு மேல் சேதமடைந்துள்ள பயிர்களுக்கு படிவம் II–B–ல் பரிந்துரை செய்து அறிக்கை நீலகிரி மாவட்ட ஆட்சியரிடம் இருந்து வரப் பெற்றுள்ளதாக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் தெரிவித்துள்ளதாக

(கு.பி.பா)

குறிப்பிட்டுள்ளார். மேலும், நீலகிரி மாவட்டத்தில் மழை மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்ட தோட்டக்கலை பயிர்களின் சேத விவரத்தினை கீழ்கண்டவாறு நீலகிரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | மாவட்டம் | கிராமம் / வட்டாரம் | பயிர் சேதமடைந்த நாள் | பயிர் (ஹெக்டேருக்கு) | | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | மாவட்ட ஆட்சியரால் கோரப்படும் தொகை ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.30,000/- |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தோட்டக் கலை பயிர்கள் ரூபாய். 13,500/- | நிலையான பயிர்கள் ரூபாய். 18,000/- | | | | |
| 1 | நீலகிரி | நாஞ்சநாடு | 22.07.2021 | பூண்டு | - | 27.00 | 19.80 | 26 | (19.80 x 30000) 594000 |
| | | | 22.07.2021 | பீட்ரூட் | - | 38.00 | 14.50 | 28 | (14.50 x 30000) 435000 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 149.00 | 4.50 | 12 | (4.50 x 30000) 135000 |
| | | மொத்தம் | | | | 214.00 | 38.80 | 72 | 11,64,000 |
| 2 | நீலகிரி | இதலார் | 22.07.2021 | பீட்ரூட் | - | 26.00 | 16.40 | 46 | (16.40 x 30000) 4,92,000 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 30.00 | 9.90 | 19 | (9.90 x 30000) 2,97,000 |
| | | | 22.07.2021 | பூண்டு | - | 12.70 | 11.40 | 22 | (11.40 x 30000) 3,42,000 |
| | | மொத்தம் | | | | 68.70 | 37.70 | 87 | 11,31,000 |
| 3 | நீலகிரி | கெட்டி | 22.07.2021 | பீட்ரூட் | - | 2.20 | 2.20 | 4 | (2.20 x 30000) 66,000 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 5.70 | 5.70 | 9 | (5.70 x 30000) 1,71,000 |
| | | | 22.07.2021 | பூண்டு | - | 6.0 | 4.0 | 6 | (4.0x 30000) 1,20,000 |
| | | மொத்தம் | | | | 13.90 | 11.90 | 19 | 3,57,000 |
| 4 | நீலகிரி | அதிகரட்டி | 23.07.2021 | பூண்டு | - | 14.20 | 14.20 | 25 | (14.20x 30000) 4,26,000 |
| | | மொத்தம். | | | | 14.20 | 14.20 | 25 | 4,26,000 |
| 5 | நீலகிரி | செருமுள்ளி | 19.07.2021 முதல் 25.07.2021 | வாழை | - | 0.40 | 0.20 | 1 | (0.20x 30000) 6,000 |
| | | மொத்தம் | | | | 0.40 | 0.20 | 1 | 6,000 |
| 6 | நீலகிரி | முனாநாடு | 19.07.2021 முதல் 25.07.2021 | வாழை | - | 4.77 | 4.03 | 21 | (4.03x 30000) 1,20,900 |
| | | | | மொத்தம் | | 4.77 | 4.03 | 21 | 1,20,900 |
| | | | | கூடுதல் மொத்தம் | | 315.97 | 106.83 | 225 | 32,04,900 |

மேற்படி மழை மற்றும் காற்றினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவது தொடர்பான முன்மொழிவுகள், அரசாணை (நிலை) எண்.246, வருவாய்

மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே III(2)) துறை, நாள். 03.08.2017-ம் வேளாண்மை, b(ii)ன் படி கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டதில், தற்காலிக பயிர்களுக்கு (தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு) ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- மற்றும் நிலையான பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000/- வீதம் நிவாரணத் தொகையாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிவாரணத் தொகையானது தற்காலிக பயிர்களுக்கு பாதிக்கப்பட்ட நபர் ஒன்றுக்கு ரூ.1,000/-ம் நிலையான பயிர்களுக்கு பாதிப்படைந்த நபர் ஒருவருக்கு ரூ.2,000/-ம் குறைவில்லாமல் இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | மாவட்டம் | கிராமம் / வட்டாரம் | பயிர் சேதமடைந்த நாள் | பயிர் (ஹெக்டேருக்கு) | | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | அரசாணை (நிலை) எண்.240, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை நிதி பே.மே III (2) நாள். 03.08.2017-ன் படி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பரிந்துரை செய்யப்படும் தொகை ஹெக்டேருக்கு ரூ.13500/- |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தோட்டக்கலை பயிர்கள் ரூபாய். 13,500/- | நிலையான பயிர்கள் ரூபாய். 18,000/- | | | | |
| 1 | நீலகிரி | நாருஞ்சநாடு | 22.07.2021 | பூண்டு | - | 27.00 | 19.80 | 26 | (19.80 x 13500) 267300 |
| | | | 22.07.2021 | பீட்ரூட் | - | 38.00 | 14.50 | 28 | (14.50 x 13500) 195750 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 149.00 | 4.50 | 12 | (4.50 x 13500) 60750 |
| | | மொத்தம் | | | | 214.00 | 38.80 | 72 | 523800 |
| 2 | நீலகிரி | இதலார் | 22.07.2021 | பீட்ரூட் | - | 26.00 | 16.40 | 46 | (16.40 x 13500) 221400 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 30.00 | 9.90 | 19 | (9.90 x 13500) 133650 |
| | | | 22.07.2021 | பூண்டு | - | 12.70 | 11.40 | 22 | (11.40 x 13500) 153900 |
| | | மொத்தம் | | | | 68.70 | 37.70 | 87 | 508950 |
| 3 | நீலகிரி | கெட்டி | 22.07.2021 | பீட்ரூட் | - | 2.20 | 2.20 | 4 | (2.20 x 13500) 29700 |
| | | | 22.07.2021 | கேரட் | - | 5.70 | 5.70 | 9 | (5.70 x 13500) 76950 |
| | | | 22.07.2021 | பூண்டு | - | 6.0 | 4.0 | 6 | (4.0 x 13500) 54,000 |
| | | மொத்தம் | | | | 13.90 | 11.90 | 19 | 160650 |
| 4 | நீலகிரி | அதிகரட்டி | 23.07.2021 | பூண்டு | - | 14.20 | 14.20 | 25 | (14.20 x 13500) 191700 |
| | | மொத்தம் | | | | 14.20 | 14.20 | 25 | 191700 |
| 5 | நீலகிரி | செருமுள்ளி | 19.07.2021 முதல் 25.07.2021 | வாழை | - | 0.40 | 0.20 | 1 | (0.20 x 13500) 2700 |
| | | மொத்தம் | | | | 0.40 | 0.20 | 1 | 2700 |
| 6 | நீலகிரி | முணாடு | 19.07.2021 முதல் 25.07.2021 | வாழை | - | 4.77 | 4.03 | 21 | (4.03 x 13500) 54405 |
| | மொத்தம் | | | | | 4.77 | 4.03 | 21 | 54405 |
| | கூடுதல் மொத்தம் | | | | | 315.97 | 106.83 | 225 | 14,42,205 |

(த.பி.பா)

2. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் 19.07.2021 முதல் 25.07.2021 வரையிலான காலகட்டத்தில் மழை மற்றும் காற்றினால் பாதிப்படைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- வீதம் நிவாரணத் தொகையாக ரூ.14,42,205/-ஐ மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்க, நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு நிதி ஒதுக்கீடு செய்யலாம் என முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிர்வாக ஆணையர் அரசிற்கு தனது பரிந்துரை செய்துள்ளார்.

3. முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, மாநில செயற்குழுவின் ஒப்புதலையும் ஏற்று, நீலகிரி மாவட்டத்தில் 19.07.2021 முதல் 25.07.2021 வரையிலான காலகட்டத்தில் மழை மற்றும் காற்றினால் பாதிப்படைந்த தோட்டக்கலை பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/- வீதம் நிவாரணத் தொகையாக ரூ.14,42,205/-ஐ (ரூபாய் பதினான்கு இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து இருநூற்று ஐந்து மட்டும்) உரிய பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்க ஏதுவாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நீலகிரி மாவட்ட ஆட்சியருக்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2245 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு -02 - வெள்ளம், புயல் முதலியவை - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் - BH வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலைப் பயிர்கள் சேதமுற்றதற்கு உழவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகள்-311 மானியங்கள் -01 தனித்திட்டம் மானியம்"

(IFHRMS த.தொ.கு. 2245 02 800 BH 31101)

5. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2022-2023ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2022-2023 துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2022-2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.16064/வருவாய்/2022, நாள்12.04.2022 பெறப்பட்ட இசைவுடன், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.18(பதினெட்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

முதன்மைச் செயலாளர் /வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம், சென்னை-600005.
இயக்குநர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை-600005.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி.
மாவட்ட கருவூல அலுவலர், நீலகிரி.
முதன்மை கணக்காயர், சென்னை-600018/600035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600008.

நகல்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
~~பொதுப்பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600009.~~
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு முதன்மைச் செயலாளர்,
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-600009.
அரசு முதன்மைச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை-600009.

(த.பி.பா)

நிதி (வருவாய் / வ.செ.பொ– 2/ வவ 1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு/பே.மே.3) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/4/22
(து.நடராஜன்)
அரசு சார்புச் செயலாளர்